# Chapter 1.3

# தமிழரின் கப்பற்கலை

---

## மதிப்பீடு

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

**Question 1.**
தமிழர்கள் சிறிய நீர்நிலைகளைக் கடக்கப் பயன்படுத்தியது ……..
அ) கலம்
ஆ) வங்கம்
இ) நாவாய்
ஈ) ஓடம்

**Answer:**
ஈ) ஓடம்

**Question 2.**
தொல்காப்பியம் கடற்பயணத்தை …………………… வழக்கம் என்று கூறுகிறது.
அ) நன்னீ ர்
ஆ) தண்ணீ ர்
இ) முந்நீர்
ஈ) கண்ணீ ர்

**Answer:**
இ)
(முந்நீர்)

**Question 3.**
கப்பலை உரிய திசையில் திருப்புவதற்குப் பயன்படும் கருவி ……………..
அ) சுக்கான்
ஆ) நங்கூரம்
இ) கண்ண டை
ஈ) சமுக்கு

**Answer:**
அ) சுக்கான்

கோடிட்ட இடங்களை நிரப்புக

**Question 1.**
கப்பல் கட்டுவதற்குப் பயன்படும் மர ஆணிகள் ………. …….. என அழைக்கப்படும்.

**Answer:**
தொகுதி

**Question 2.**
கப்பல் ஓரிடத்தில் நிலையாக நிற்க உதவுவது …

**Answer:**
நங்கூரம்

**Question 3.**
இழைத்த மரத்தில் காணப்படும் உருவங்கள் எனக் குறிப்பிடப்படும்.

**Answer:**
கண்ணடை

**பொருத்துக –**

1. எரா – திசைகாட்டும் கருவி
2. பருமல் – அடிமரம்
3. மீகாமன் – குறுக்கு மரம்
4. காந்த ஊசி – கப்பலைச் செலுத்துபவர்

**Answer:**
1. எரா – அடிமரம்
2. பருமல் – குறுக்கு மரம்
3. மீகாமன் – கப்பலைச் செலுத்துபவர்
4. காந்த ஊசி – திசைகாட்டும் கருவி

**தொடர்களில் அமைத்து எழுதுக**

1. நீரோட்டம்
கடல் <u>நீரோட்டங்களின்</u> திசையை தமிழர்கள் தம் பட்டறிவால் நன்கு அறிந்திருந்தனர்.

2. காற்றின் திசை
<u>காற்றின் திசையை</u> அறிந்து கப்பல்களைச் செலுத்தும் முறையைத் தமிழர்கள் நன்கு அறிந்திருந்தனர்.

3. வானியல் அறிவு
கப்பல் ஓட்டும் மாலுமிகள் சிறந்த <u>வானியல் அறிவைப்</u> பெற்றிருந்தனர்.

4. ஏற்றுமதி
பூம்புகார் துறைமுகத்திலிருந்து கப்பல்கள் மூலம் பொருள்கள் <u>ஏற்றுமதியும்</u> இறக்குமதியும் செய்யப்பட்டன.

**குறுவினா**

**Question 1.**
தோணி என்னும் சொல்லின் பெயர்க்காரணத்தைக் கூறுக.

**Answer:**

- எடைக் குறைந்த பெரிய மரங்களின் உட்பகுதியைக் குடைந்து எடுத்துவிட்டுத்த தோணியாகப் பயன்படுத்தினர் தமிழர்கள்.
- உட்பகுதி தோண்டப்பட்டவை என்பதால் அவை தோணிகள் எனப்பட்டன.
- சிறிய நீர்நிலைகளைக் கடக்கத் தமிழர்கள் தோணியைப் பயன்படுத்தினர்.

**Question 2.**
கப்பல் கட்டும்போது மரப்பலகைகளுக்கு இடையே தேங்காய் நார் அல்லது பஞ்சு வைப்பதன் நோக்கம் என்ன?

**Answer:**

- மரங்களையும் பலகைகளையும் ஒன்றோடு ஒன்று இணைக்கும் போது அவற்றுக்கு இடையே தேங்காய் நார்,

பஞ்சு ஆகியவற்றில் ஒன்றை வைத்து நன்றாக இறுக்கி ஆணிகளை அறைந்தனர்.

- சுண்ணாம்பையும் சணலையும் கலந்து அரைத்து அதில் எண்ணெய் கலந்து கப்பலின் அடிப்பகுதியில் பூசினர்.
- இதனால் கப்பல்கள் பழுதடையாமல் நெடுங்காலம் உழைத்தன.

**Question 3.**
கப்பல் உறுப்புகள் சிலவற்றின் பெயர்களைக் கூறுக.

**Answer:**
கப்பலின் உறுப்புகள் :

- கப்பல் பல்வேறு வகையான உறுப்புகளை உடையது.
- எரா, பருமல், வங்கு , கூம்பு, பாய்மரம், சுக்கான், நங்கூரம் போன்றவை கப்பலின் உறுப்புகளுள் சிலவாகும்.

## சிறுவினா

Question 1.
சிறிய நீர்நிலைகளையும் கடல்களையும் கடக்கத் தமிழர்கள் பயன்படுத்திய ஊர்திகளின் பெயர்களை எழுதுக.

**Answer:**

- தமிழர்கள் தோணி, ஓடம், படகு, புணை, மிதவை, தெப்பம் போன்றவற்றைச் சிறிய நீர்நிலைகளைக் கடக்கப் பயன்படுத்தினர்.
- கலம், வங்கம், நாவாய் முதலியவை அளவில் பெரியவை.
- இவற்றைக் கொண்டு தமிழர்கள் கடல் பயணம் மேற்கொண்டனர்.

**Question 2.**
பண்டைத் தமிழரின் கப்பல் செலுத்தும் முறை பற்றி எழுதுக.

**Answer:**
கப்பலைச் செலுத்தும் முறை :

- காற்றின் திசையை அறிந்து கப்பல்களைச் செலுத்தும் முறையைத் தமிழர்கள் நன்கு அறிந்திருந்தனர்.

- இவ்வுண்மையை வெண்ணிக்குயித்தியார் தம் புறப்பாடலில் குறிப்பிடுகிறார். “நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி வளி தொழில் ஆண்ட உரவோன் மருக – வெண்ணிக் குயத்தியார்
- கடலில் காற்று வீசும் திசை, கடல் நீரோட்டங்களின் திசை ஆகியவற்றைத் தமிழர்கள் தம் பட்டறிவால் நன்கு அறிந்து அவற்றுக்கு ஏற்ப உரிய காலத்தில் சரியான திசையில் கப்பலைச் செலுத்தினர்.

**Question 3.**
கப்பல் பாதுகாப்பானதாக அமையத் தமிழர்கள் கையாண்ட வழிமுறைகள் யாவை?

**Answer:**

- பெருந்திரளான மக்களையும் பொருள்களையும் ஏற்றிச் செல்லும் வகையில் பெரிய கப்பல்களைத் தமிழர் உருவாக்கினர்.
- நீண்ட தூரம் கடலிலேயே செல்ல வேண்டி இருந்ததால் கப்பல்களைப் பாதுகாப்பனவையாகவும் வலிமைமிக்கவையாகவும் உருவாக்கினர்.
- கப்பல் கட்டுவதற்கு உரிய மரங்களைத் தேர்ந்தெடுப்பதில் தமிழர்கள் மிகுந்த கவனம் செலுத்தினர். தண்ணீரால் பாதிப்பு அடையாத மரங்களையே கப்பல் கட்டப் பயன்படுத்தினர். நீர்மட்ட வைப்பிற்கு வேம்பு, இலுப்பை, புன்னை, நாவல் போன்ற மரங்களைப் பயன்படுத்தினர்.
- பக்கங்களுக்குத் தேக்கு, வெண்தேக்கு போன்ற மரங்களைப் பயன்படுத்தினர். நீளம், அகலம், உயரம் ஆகியவற்றைச் சரியான முறையில் கணக்கிட்டுக் கப்பலை உருவாக்கினர்.
- மரங்களையும் பலகைகளையும் இணைக்கும் போது அவற்றுக்கு இடையே தேங்காய் நார் அல்லது பஞ்சு இவற்றில் ஒன்றை வைத்து இறுக்கி ஆணிகளை அறைந்தனர். மரத்தால் ஆன ஆணிகளையே பயன்படுத்தினர்.

**சிந்தனை வினா**

**Question 1.**
இக்காலத்தில் மக்கள் வெளிநாடுகளுக்குச் செல்வதற்கு கடற்பயணத்தைப் பெரிதும் மேற்கொள்ளாதது ஏன் எனச் சிந்தித்து எழுதுக.

**Answer:**
தற்போது விமானம் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு, கடற்வழி பயணம் விரும்பத்தகாத ஒன்றாக மாறிவிட்டது. காலதாமதம் காரணமாக தற்பொழுது கடல் வழி பயணத்தைத் தவிர்த்து வான்வெளிப் பயணத்தை ஏற்றனர். அதன் காரணமாகவே கடற்வழிப் பயணத்தை பெரிதும் மேற்கொள்ளுதலைத் தவிர்த்தனர்.

## கற்பவை கற்றபின்

**Question 1.**
பலவகையான கப்பல்களின் படங்களைச் சேகரித்துப் படத்தொகுப்பு ஒன்று உருவாக்குக.

**Answer:**
பாய்மரக்கப்பல்கள் :

- காற்றின் உதவியால் செலுத்தப்படும் கப்பல்கள் பாய்மரக்கப்பல்கள் எனப்பட்டன.
- பெரிய பாய்மரம், திருக்கைத்திப் பாய்மரம், காணப் பாய்மரம், கோசுப் பாய்மரம் போன்ற பலவகையான பாய்மரங்களைத் தமிழர் பயன்படுத்தினர்.




நீர்மூழ்கிக் கப்பல்கள் :

- இவை நீரில் மூழ்கியபடியே வெகு தொலைவு செல்லக்கூடிய நீர் ஊர்தி ஆகும்.
- நீர்மூழ்கிக் கப்பல்கள் போரில், பகைவர் கப்பல்களைத் தாக்குதல், முற்றுகையை முறியடித்தல், நீரில் இருந்தபடியே நிலப்பகுதியைத் தாக்குதல், இரகசியமாகச் சிறப்புப் E படைகளை முக்கியப் பகுதிகளில் இறக்கி வியூகம் அமைத்தல் ஆகிய பல பணிகளைச் ஒ செய்ய வல்லவை.



**பயணிகள் கப்பல்கள் :**

- பயணிகள் கப்பல்களின் அளவு சிறிய ஆற்று படகுகளில் இருந்து மிக பெரிய கப்பல்கள் வரை இருக்கும்.
- ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குப் பயணிகளைக் கொண்டு செல்லும் கப்பல்கள்.
- குறுகிய பயணங்களுக்குப் பயணிகள் மற்றும் வாகனங்களை ஏற்றிச் செல்லும் கப்பல்கள், இன்பப் பயணங்கள் மேற்கொள்ளப்படும் கப்பல்கள் இந்த வகையில் அடங்கும்.



**எண்ணெய்க் கப்பல்கள் :**

திரவ பெட்ரோலிய வாயு , திரவ இயற்கை எரிவாயு , வேதிப்பொருட்கள் ஆகியவற்றைச் சுமந்து செல்லும் கப்பல்கள்.

**சரக்குக் கப்பல்கள் :**

- சரக்குக் கப்பல் என்பது ஒரு துறைமுகத்தில் இருந்து இன்னொரு துறைமுகத்துக்குச் சரக்கு மற்றும் பல்வேறு  பொருட்களை எடுத்துச் செல்லும் கப்பலாகும்.
- சரக்குக் கப்பல்கள் பொதுவாக அவற்றின் தேவைக்கு ஏற்ப வடிவமைப்புச் செய்யப்படுகின்றன.
- பொருட்களை ஏற்றி இறக்கும் வசதிக்காக அவற்றில் பாரந்தூக்கிகளும் பொருத்தப்படுவதுண்டு.

**Question 2.**
தரைவழிப்பயணம், கடல்வழிப்பயணம், வான்வழிப்பயணம் ஆகியவை குறித்து வகுப்பறையில் கலந்துரையாடுக.

**Answer:**
இடம் : அரசு உயர்நிலைப்பள்ளி.

நடிகர்கள் : கபிலன், மணிவண்ண ன், கயல்விழி, தேன்மொழி, தமிழாசிரியர்,

விளக்கம் : ஏழாம் வகுப்பு மாணவர்கள் வகுப்பறையில் கலந்துரையாடுகின்றனர். உடன் தமிழாசிரியர் தமிழ்வேந்தன் அவர்கள் உரையாடலில் உடன் பங்கேற்கின்றார்.

தமிழ்வேந்தன் : மாணவச் செல்வங்களே! இன்று நாம் எதைப் பற்றி உரையாடப் போகிறோம் தெரியுமா?

கயல்விழி : சொல்லுங்கள் ஐயா! தெரிந்து கொள்கிறோம்.

தமிழ்வேந்தன் : கோடை விடுமுறையில் நீங்கள் ஊர்ப்பயணம் போவீர்களா?

மணிவண்ணன் : நிச்சயமாக

தமிழ்வேந்தன் : எங்கு போவீர்கள்?

தேன்மொழி : எங்கள் பாட்டி வீட்டிற்குப் போவேன் ஐயா!

தமிழ்வேந்தன் : எப்படி போவீர்கள்?

தேன்மொழி : பேருந்தில் பயணம் செய்வேன் ஐயா!

தமிழ்வேந்தன் : அதாவது தரைவழிப் பயணம் அப்படித்தானே!

தேன்மொழி : ஆமாம் ஐயா!

தமிழ்வேந்தன் : பேருந்து, சிற்றுந்து, மகிழுந்து, இரு சக்கரவாகனம் இவையாவும் தரைவழிப்பயணம் தானே!

கயல்விழி : ஆமாம் ஐயா!

தமிழ்வேந்தன் : தரைவழிப்பயணம் செல்வதில் சிக்கல்கள் ஏதாவது உண்டா?

கபிலன் : ஒன்றா இரண்டா எடுத்துச் சொல்ல ! பெருகி வரும் மக்கள்தொகையில் நகர்புறம், கிராமப்புறம் எங்கும்போக்குவரத்து இடையூறுகள் அதிகம். வாகனங்கள் மக்கள் தொகைப் போல பன்மடங்கு பெருகி உள்ளன ஐயா!

தமிழ்வேந்தன் : இதனைக் கட்டுப்படுத்த என்ன வழி?

கபிலன் : சாலைகளை விரிவாக்கம் செய்ய வேண்டும் ஐயா!

தமிழ்வேந்தன் : நல்ல கருத்து இது வரவேற்கத்தக்கது. இதைத்தவிர வேறு பயணம் ஏதாவது உண்டா ?

தேன்மொழி : உண்டு ஐயா ! கடல்வழிப் பயணம்

தமிழ்வேந்தன் : ஆதியில் பெருந்திரளான மக்கள் தங்களையும் தங்கள் உடைமைகளையும் ஏற்றிச் செல்ல கப்பலைமலைபோல நம்பி இருந்தனர்.

தேன்மொழி : அது மட்டுமல்ல ஐயா, நீண்ட தூரம் கடலிலேயே செல்ல வேண்டி இருந்தால் கப்பல் பயணம் பாதுகாப்பானது மற்றும் மனதிற்கு மகிழ்ச்சி தரக்கூடியது.

கயல்விழி : போக்குவரத்து இடையூறு கப்பல் பயணத்தில் இல்லை

ஐயா ! கடல் வழிப்பயணத்தில் துரிதமாக போக வேண்டிய இடத்திற்கு போய்ச் சேரலாம். மனதிற்கும் உடலுக்கும் புது தெம்பு தருவது இந்த ..
கடல் வழிப் பயணம்தான்.

தமிழ்வேந்தன் : நல்லது. இதைத் தவிர வேறு பயணம் ஏதாவது உண்டா ?

மணிவண்ண ன் : தரைவழிப் பயணம், கடல் வழிப்பயணம் இரண்டையும் பின்னுக்குத்
தள்ளும் பயணம் வான் வழிப் பயணம்தான்.

தமிழ்வேந்தன் : எப்படி?

மணிவண்ணன் : கட்டணச் செலவு கூடுதலாக இருந்தாலும் நாம் போய் சேர வேண்டிய இடத்திற்குச் சில மணிநேரங்களில் அலுங்காமல் குலுங்காமல் போய் சேரலாம். இதனால் நேரம் மிச்சம். சுகமான பயணம் ஐயா!

தமிழ்வேந்தன் : உண்மைதான்! இருப்பினும் நடுத்தர மக்களுக்கும், ஏழை எளிய மக்களுக்கும் சாதகமாக இருக்கும் பயணம் தரைவழிப் பயணம் மட்டும் தான். காத்திருப்பதிலும் ஒரு சுகம்தான்! கூட்ட நெரிசலில் பயணிப்பதும் ஒரு தனி சுகம்தான் !

(பள்ளி மணி ஒலிக்கிறது)

கூடுதல் வினாக்கள்

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

**Question 1.**
முந்நீர் வழக்கம் என்று தொல்காப்பியம் எதைக் குறிப்பிடுகிறது?
அ) கடற்பயணம்
ஆ) வான்வழிப்பயணம்
இ) தரைவழிப்பயணம்
ஈ) இவை ஏதுமில்லை

**Answer:**
அ) கடற்பயணம்

**Question 2.**
பூம்புகார் துறைமுகத்தில் இருந்து கப்பல்கள் மூலம் பொருள்களை ஏற்றுமதி இறக்குமதி செய்யப்பட்டன. இக்கூற்றை மெய்ப்பித்த நூல் எது?
அ) அகநானூறு
ஆ) பட்டினப்பாலை
இ) கலித்தொகை
ஈ) குறுந்தொகை

**Answer:**
ஆ) பட்டினப்பாலை

**Question 3.**
"உலகு கிளர்ந்தன்ன உருகெழு வங்கம்" – இத்தொடர் இடம் பெற்ற நூல் எது?
அ) அகநானூறு
ஆ) புறநானூறு
இ) பட்டினப்பாலை
ஈ) மதுரைக்காஞ்சி

**Answer:**
அ) அகநானூறு

**Question 4.**
பலவகையான கப்பல்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன என்பதனை மெய்ப்பிக்கும் நூல் எது?
அ) சேந்தன் திவாகரம்
ஆ) ஏலாதி
இ) திருமந்திரம்
ஈ) சீவகசிந்தாமணி

**Answer:**
அ) சேந்தன் திவாகரம்

**Question 5.**
தமிழர்கள் பயன்பாட்டில் உருவான கப்பல்கள் பழுதடையாமல் நெடுங்காலம் உழைத்தன. இம்முறையைக் கண்டு வியந்தவர்.

அ) மார்க்கோபோலோ
ஆ) ஆம்ஸ்ட்ராங்
இ) கலிலியோ
ஈ) இவர்களில் யாருமில்லை

**Answer:**
அ) மார்க்கோபோலோ

**Question 6.**
கப்பலின் முதன்மையான உறுப்பாகிய அடிமரம் ……………
எனப்படும்
அ) எரா
ஆ) பருமல்
இ) சுக்கான்
ஈ) வங்கு

**Answer:**
அ) எரா

**Question 7.**
குறுக்கு மரத்தை …………. என்பர்
அ) நங்கூரம்
ஆ) சமுக்கு
இ) கூம்பு
ஈ) பருமல்

**Answer:**
ஈ) பருமல்

**Question 8.**
கப்பல் செலுத்துபவரை ….. …… என அழைப்பர்.
அ) மாலுமி
ஆ) கம்மியர்
இ) கனரக வாகனம் ஓட்டுநர்
ஈ) இவர்களில் யாருமில்லை

**Answer:**
அ) மாலுமி

**கோடிட்ட இடத்தை நிரப்புக**

**Question 1.**
கப்பலை அழைக்கும் விளக்கு என்னும் பொருளுக்கு ………………… என்று பெயர்.

**Answer:**
கலங்கரை விளக்கம்

**Question 2.**
கடலில் செல்லும் கப்பல்களுக்குத் துறைமுகம் இருக்கும் இடத்தைக் காட்டுவதற்காக அமைக்கப்படுவது ……………..
விடை:
கலங்கரை விளக்கம்

**Question 3.**
கலம் என்பதன் பொருள் …………

**Answer:**
கப்பல்

**Question 4.**
கரைதல் என்பதன் பொருள் ……………

**Answer:**
அழைத்தல்

**Question 5.**
கப்பலைச் செலுத்துவதற்கும், உரிய திசையில் திருப்புவதற்கும் பயன்படும் முதன்மையான கருவி …………………… எனப்ப டும்.

**Answer:**
சுக்கான்

**Question 6.**
கப்பலை நிலையாக ஓரிடத்தில் நிறுத்தி வைக்க உதவும் உறுப்பு ………………….. ஆகும்.

**Answer:**
நங்கூரம்]

**Question 7.**
மரத்தின் வெட்டப்பட்ட பகுதியை …………… என்பர்.

**Answer:**
வெட்டுவாய்

**Question 8.**
……… என்பது இழைத்த மரத்தில் காணப்படும் உருவங்கள் ஆகும்.

**Answer:**
கண்ணடை

**Question 9.**
நீளம், அகலம், உயரம் ஆகியவற்றை சரியான முறையில் கணக்கிட்டுக் கப்பலை உருவாக்கினர். இவற்றை …………………..என்னும் நீட்டலளவையால் கணக்கிட்டனர்.

**Answer:**
தச்சு முழம்

**Question 10.**
பெரிய படகுகளில் முன் பக்கம் …………………….. என அழைக்கப்பட்டன.

**Answer:**
கரிமுக அம்பி, பரிமுக அம்பி

**Question 11.**
கப்பல்கள் பழுதடையாமல் நெடுங்காலம் உழைக்க மரத்தால் ஆன ஆணிகளைப் பயன்படுத்தினர் இந்த ஆணிகளை……………… என்பர்.

**Answer:**
தொகுதி

**Question 12.**
பாய்மரங்களைத் ……………… பயன்படுத்தினர்.

**Answer:**
தமிழர்]

**Question 13.**
தமிழர் கட்டிய கப்பல்களை ஐம்பது ஆண்டுகள் வரை பழுது பார்க்க வேண்டிய அவசியமில்லை எனக் கூறியவர் ………………..

**Answer:**
வாக்கர் என்னும் ஆங்கிலேயர்

**விடையளி :**

**Question 1.**
பாய்மரக் கப்பல்கள் என்றால் என்ன?

**Answer:**
காற்றின் உதவியால் செலுத்தப்படும் கப்பல்கள் பாய்மரக் கப்பல்கள் எனப்பட்டன.

**Question 2.**
பாய்மரங்களின் பல வகைகளைக் குறிப்பிடுக.

**Answer:**
பெரிய பாய்மரம், திருக்கைத்திப் பாய்மரம், காணப் பாய்மரம், கோசுப் பாய்மரம் போன்ற ல பலவகையான பாய்மரங்களைத் தமிழர் பயன்படுத்தினர்.

**Question 3.**
பாய்மரங்களைக் கட்டும் கயிறுகளின் வகைகளை வரிசைப்படுத்துக.

**Answer:**

1. ஆஞ்சான் கயிறு
2. தாம்பாங்கயிறு
3. வேடாங்கயிறு
4. பளிங்கைக் கயிறு
5. மூட்டங்கயிறு
6. இளங்கயிறு
7. கோடிப்பாய்க்கயிறு.

**Question 4.**
கப்பல் செலுத்துபவரை எவ்வாறு அழைப்பர்?

**Answer:**
கப்பல் செலுத்துபவரை மாலுமி, மீகாமன், நீகான், கப்பலோட்டி முதலிய பல பெயர்களால் அழைப்பர்.

**Question 5.**
எரா என்றால் என்ன?

**Answer:**
கப்பலின் முதன்மையான உறுப்பாகிய அடிமரம் எரா எனப்படும்.

**Question 6.**
சுக்கான் என்றால் என்ன?

**Answer:**
கப்பலைச் செலுத்துவதற்கும், உரிய திசையில் திருப்புவதற்கும் பயன்படும் முதன்மையான கருவி சுக்கான் எனப்படும்.

**Question 7.**
நங்கூரம் எதற்கு பயன்படுகிறது?

**Answer:**
கப்பலை நிலையாக ஓரிடத்தில் வைக்க உதவும் உறுப்பு நங்கூரம் ஆகும். இது கப்பலை ஓரிடத்தில் நிறுத்துவதற்குப் பயன்படுகிறது.

**Question 8.**
சமுக்கு என்றால் என்ன?

**Answer:**

- சமுக்கு என்னும் ஒரு கருவியையும் கப்பலில் பயன்படுத்தினர் என்று கப்பல் சாத்திரம் என்னும் நூல் குறிப்பிடுகிறது.

- இது காந்த ஊசி பொருத்தப்பட்ட திசை காட்டும் கருவியாக இருக்கலாம் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

**Question 9.**
மீகாமன் – குறிப்பு வரைக.

**Answer:**

- மீகாமன் என்பதற்குக் கப்பலைச் செலுத்துபவர் என்பது பொருளாகும்.
- கப்பல் ஓட்டும் மாலுமிகள் சிறந்த வானியல் அறிவையும் பெற்றிருந்தனர்.
- கோள்களின் நிலையை வைத்துப் புயல், மழை போன்றவை தோன்றும் காலங்களையும் கடல் நீர் பொங்கும் காலத்தையும் அறிந்து தகுந்த காலத்தில் கப்பல்களைச் செலுத்தினர்.
- கடலில் காற்று வீசும் திசை, கடல் நீரோட்டங்களின் திசை ஆகியவற்றைத் தமிழர்கள் அறிந்திருந்தனர்.